கவனிக்க .- (i) இவ்வாரம் வெளியாகும் வர்த்தமானியின் பகுதி VI இல் 2026 ஆம் ஆண்டுக்கான கண்டி, கேகாலை மாவட்டங்களின் நீதாசன வலயத்துக்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியல் ஒன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் பிரசுரிக்கப்படும்.
(ii) 2026.07.31 ஆந் திகதிய 2500 ஆம் இலக்க வர்த்தமானியில் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2501 - 2026 අගෝස්තු 07 වැනි සිකුරාදා - 2026.08.07

2501 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | 1530 |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 1530 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 1535 |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினம் அவை வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும். இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2026, ஓகத்து மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, ஓகத்து மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன,**
**அரசாங்க அழுத்தகர்.**

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 08,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.


1529 - B 82818 - (2026/08)

# அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

2026 இன் இல. 451

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் திரு. எம். எஸ். மஹதிவுல்வெவ அவர்கள், 2026, மே மாதம் 15 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக வர்த்தக பணிப்பாளர் பதவிக்கான கடமைகளுடன், வர்த்தக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளையின் படி,

ஒப்பம்./ டப்ளியூ. எம். டி. ஜே. பெர்னாண்டோ,
அமைச்சரவைச் செயலாளர்.

2026, யூலை மாதம் 24.

08-27

2026 இன் இல. 452

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை விஞ்ஞான சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரான திரு. ஏ. எல். கே. விஜேமான்னகே அவர்கள், 2026, யூலை மாதம் 03 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக வளிமண்டலவியல் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளையின் படி,

ஒப்பம்./ டப்ளியூ. எம். டி. ஜே. பெர்னாண்டோ,
அமைச்சரவைச் செயலாளர்.

2026, யூலை மாதம் 30.

08-57

# அரசாங்க அறிவித்தல்கள்

**1976 இன் 18 ஆம் இலக்க வீட்டு ஆதன உச்சவரம்பு (திருத்த)ச் சட்டம் மூலம் திருத்தியவாறான 1973 இன் 01 ஆம் இலக்க வீட்டு ஆதன உச்சவரம்பு பற்றிய சட்டத்தின் 13 A(1)(d) ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்.**

மேல் மாகாணத்தின், கொழும்பு மாவட்டத்தின், கொழும்பு 02, ஸ்ருவட் வீதியின், வீதவரி இலக்கம் 47 ஐக் கொண்ட இடத்தில் வசிக்கும் மொஹமட் சிப்லி என்பவர் மேற்படி சட்டத்தின் கீழ் குறித்த வீட்டைக் கொள்வனவு செய்வதற்கு அப்போதைய தேசிய வீடமைப்பு ஆணையாளருக்கு விண்ணப்பப்படிவம் ஒன்றை சமர்ப்பித்துள்ள போதிலும், அது பற்றிய பரிசோதனைகள் நிறைவு செய்யப்படாமை காரணமாக, குறித்த விண்ணப்பப்படிவம் தொடர்பான இறுதித் தீர்மானத்தை மேற்கொள்வது தொடர்பாக யாதாயினும் ஆட்சேபணைகள் இருப்பின் இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டு 03 மாத காலப்பகுதிக்குள் மேற்படி ஆட்சேபணைகளை என்னிடம் எழுத்துமூலம் சமர்ப்பித்தல் வேண்டும் என்று இத்தால் அறியத்தருகின்றேன்.

சட்டத்தரணி பீ. சீ. ஜே. நேசையா,
தேசிய வீடமைப்பு ஆணையாளர்.

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
2 ஆம் மாடி,
செத்சிறிபாய, கட்டம் 1,
பத்தரமுல்லை.

08-10

## 1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க கடன் இணக்கக் கட்டளைச் சட்டம்
## 25/26 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1941 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க கட்டளைகள் சட்டம் 1959 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்கக் கட்டளைகள் சட்டம் 1964 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கட்டளைகள் சட்டம் 1973 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க கட்டளைகள் சட்டம் 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டம் ஆகிய திருத்தம் செய்யப்பட்ட சட்டங்களின் மூலம் திருத்தம் செய்யப்பட்ட 1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க கடன் இணக்க கட்டளைகள் சட்டத்தின் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டு உள்ள விண்ணப்ப இலக்கத்தின் முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள கடனாளி, கடன் உரித்தாளர் ஆகிய இரு தரப்பினர்களுக்கும் இடையில் தீர்வு ஒன்றினை மேற்கொள்வதற்கான முயற்சி ஒன்றினை மேற்கொள்வதற்கு கடன் இணக்க சபை எண்ணியுள்ளது.

இது தொடர்பில் இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனாளிகளிடமிருந்து தனக்கு அறவிடப்பட வேண்டிய கடன் தொகைகள் தொடர்பான விபரக் கூற்று ஒன்றினை தமக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டு உள்ள தினத்திற்கு முன்னர் இந்தச் சபையிடம் முன்வைக்குமாறு உரிய கடன் உரித்தாளர்களுக்கு கட்டளைச் சட்டத்தின் 25(1) 26(1) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறியத்தரப்படுகின்றது.

ஒப்பம் : திருமதி சுபாஷினி தயானந்த,
செயலாளர்,
கடன் இணக்க சபைத் திணைக்களம்.

கடன் இணக்க சபைத் திணைக்களம்,
இல. 35ஏ,
கலாநிதி என். எம். பெரேரா மாவத்தை,
கொழும்பு 08.
2026, யூலை மாதம் 01 ஆந் திகதி

| *விண்ணப்ப இலக்கம்* | *கடனாளியின் பெயர் மற்றும் முகவரி* | *கடன் உரித்தாளரின் பெயர் மற்றும் முகவரி* |
|---|---|---|
| (01) 46915 | திருமதி நெத்தி குமாரகே சதுரங்க லக்மால் பண்டாரகே ஹேமலதா, 260/96/1 ஏ, பலபொடுவவத்த, கோனபொல | அசோக சுனிமல் பண்டா, 98/2/3 மாவித்தர, பிலியந்தலை |
| (02) 46930 | திருமதி தொலுவரவத்த கமகே சுஜித் பிரியங்கர 178/3 சியம்பலாகொட, பொல்கஸ்ஓவிட்ட | திரு. ஹபரகமு ராலலாகே அச்சினி நிரோஷனி பீரிஸ், 178, சியம்பலாகொட, பொகஸ்ஓவிட்ட |
| (03) 46882 | மீவனகே ஜயதிலக பெரேரா இல. 364 ஏ, விகாரை வீதி, தலவத்துகொட. திருமதி பாவுலு ஹேவகே திஸ்னா சஞ்சீவனி பெரேரா இல. 364 ஏ, விகாரை வீதி, தலவத்துகொட. | திரு. ரைகம் கோரலேகே ஜயரத்ன 20/1 ஏ, ஹோகந்தர தெற்கு, ஹோகந்தர. |
| (04) 46928 | திரு. லியன்வலகே ரஞ்சன் லியன்வல கமகேவத்த தெடெல்ல அங்குருவாத்தொட்ட, ஹொரணை. | சித்துன் இன்வெஸ்ட்மென்ட் அண்ட் புரொப்பர்டீஸ் லிமிடட் 53ஏ சீலரதன வீதி ஹொரணை |
| (05) 46392 | திருமதி தேவகே கடஅ ஆரச்சிகே வருணி மஞ்சுளா விஜேசிங்ஹ 539, மாம்பே வடக்கு பிலியந்தலை. | திருமதி வவுலன் பொன்த கமகே சுதனா புஷ்பகுமாரி 1535/3 கட்டுகுருந்த சந்தி, மாலபே வீதி, கொட்டாவ, பன்னிப்பிட்டிய |
| (06) 46899 | திரு. மத்துமாகே உபுல் தீப்தி குமார 115 மாபுட்டுகல, போருவதண்ட | திருமதி பல்லகே பத்மா பெரேரா, 306/25 ஆவது ஒழுங்கை, இரண்டாம் படிமுறை, திக்ஹேனபுர, மூணகம, ஹொரண |

| *விண்ணப்ப இலக்கம்* | *கடனாளியின் பெயர் மற்றும் முகவரி* | *கடன் உரித்தாளரின் பெயர் மற்றும் முகவரி* |
|---|---|---|
| (07)<br>46643 | திரு. ஹங்கமுவே கும்பகாரகே<br>சிறிசேன 604 கெத்தாராம விகாரை வீதி,<br>மெத்தெவெல, பெந்தோட்டை<br>தொன் நிரோஷ சேனாரத்ன,<br>(அதிகாரத் தத்துவகாரர்) | திரு. மடபாத்த படபெந்திகே ஜகத் அமரவீர<br>இல. 106, பிட்டாரம்ப, பெந்தோட்டை |
| (08)<br>46932 | தொன் ஹிரான் அமரப்பிரிய ரணவீர<br>இல. 105ஏ, கிராம அபிவிருத்தி வீதி, பொல்வத்தை, பன்னிப்பிட்டிய. | திரு. ஜயக்கொடி, ஆராச்சிலாகே நந்தன ஸ்ரீலால் ஜயசிங்ஹ, சித்துமின அந்தாண, கஹவத்த.<br>திரு. ஜயகொடி ஆராச்சிலாகே துமிது மகேஷ் ஜயசிங்ஹ,<br>சித்துமின அந்தாண, கஹவத்த. |
| (09)<br>Ku 663 | திரு. மொஹமட் ஹசீர் மொஹமட் யாகூப் செய்யத் அஹமட் மொஹமட் நசீர் அல்லது செய்யத் அஹமட் முஹமட் நசீர்<br>இல. 49/2 தம்புள்ளை வீதி, மத்திய குளம் வீதி, குருநாகல் | திரு. மொஹமட் பௌஸர் மொஹமட் ஃபர்ஷான்,<br>23/2 நிஸ்ஸங்க மாவத்தை, வெஹெர குருநாகல். |
| (10)<br>GAM 608 | கங்கனே ஆரச்சிலாகே இந்திரா பிரியந்தி மெனிகே,<br>இல. 139/08, மெதலந்த, கொடிகமுவ, படல்கம | திரு. கன்னங்கர ஆரச்சிகே சுசிமன் இரேஷ் நிலந்த,<br>மெதலந்த, கொடிகமுவ, படல்கம. |
| (11)<br>GAM 6390 | பல்பிட்ட கமராலலாகே மஹிந்த பத்மலால் குணசேகர,<br>531/15 12 ஆவது ஒழுங்கை, தமின்னகஹ வத்த, கிம்புலாபிட்டிய | கடுபிட்டிகே தருஷ லக்ஷான்,<br>இல. 45/1, தெவ மொட்டாவ, ஆடியம்பலம. |
| (12)<br>GAM 610 | கயான் சஞ்சீவ எத்துகல, 373/47, பீல்லவத்த, யட்டியன, மினுவாங்கொடை. | சியாரா கெப்பிடல் (பிரைவேட்) லிமிட்டெட்<br>58/பீ, சாந்த மரியாள் மாவத்தை, கம்பஹா. |
| (13)<br>GAM 629 | திருமதி மாணிக்கிரமிகே அனோமா பிரியதர்ஷனீ,<br>314/5, வித்தியால மாவத்தை, மாகொல தெற்கு, மாகொல. | திருமதி வர்ணகுல பட்டபெந்திகே இனோகா சமந்தி பெரேரா,<br>78/1 5 ஆவது ஒழுங்கை, மாகொல வடக்கு, மாகொல. |
| (14)<br>GAM 627 | திருமதி சக்ரவர்த்திகே ரசிகா விரஞ்சனீ பெர்னாண்டோ,<br>இல. 08, சீவலி மாவத்தை மொல்பே, மொரட்டுவ | கல்ஹேனகேதோன சமித் நிரோஷனீ ஹெவத் கல்ஹேனகே சமித் நிரோஷனீ கோவின்ன பஹல நாரகல மஹவத்த |
| (15)<br>GAM 601 | ஹேவாவசம் ஹக்கலகே தருஷ தக்ஷின அபேவீர,<br>226, B/1, ஹங்வெல்ல வீதி, தினாபமுனுவ ஊராபொல. | வ/ட AK ரோயல் டிரஸ்ட் இன்வெஸ்ட்மெண்ட் தனியார் கம்பனி,<br>இல. 110, ஜயா மாவத்தை, வேபடகல்ல, நிட்டம்புவ. |
| (16)<br>43473 | திருமதி கலபடஹேவகே லீலாவதி<br>390/1, கெலேகம, நாப்பாவல, அவிசாவளை | திரு. பனாவலகே தொன் கருணாரத்ன<br>59A, முதலாவது கட்டம், சீதாவக, அவிசாவளை. |

**யாத்திரிகர் பிரயாணக் கட்டளைச் சட்டம்**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் முலட்டியன பிரதேச செயலகப் பிரிவின் தெய்யந்தர கலுகல புராண ராஜமஹா விஹாரையின் பெரஹர வைபவம் 2026 ஆம் ஆண்டின் செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி நடாத்தப்படும் என்பதை யாத்திரிகர் பிரயாணக் கட்டளைச் சட்டத்தின் 175 ஆம் அதிகாரமான யாத்திரிகர் பிரயாணக் கட்டளைச் சட்டத்தின் 2 உறுப்புரைக்கு ஏற்ப 2010 ஆம் ஆண்டின் யூலை மாதம் 23 ஆந் திகதி வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமாணிப் பத்திரத்தின் கீழ் இதன் மூலம் அறிவிக்கிறேன்.

விந்தியா டீ. சமரக்கொடி,
பிரதேச செயலாளர்,
முலட்டியன.

முலட்டியன பிரதேச செயலாளர் அலுவலகத்தில்,
2026 ஆம் ஆண்டின் யூலை மாதம் 27 ஆந் திகதி.

08-58

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல் (அத்தியாயம் 120)

கீழ்க் குறிப்பிட்ட பட்டோலையில் காணப்படும் II ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் I ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமாக III ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.

2. 2026.08.07 தொடக்கம் 2026.08.21 ஆந் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு தெல்கந்த காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமாக எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்து மூலம் 2026.08.28 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

எஸ். ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

எமது இல. : ஆர்ஜீ/ என்பீ/11/2/37/2026/ ஏடு. தயா,
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ ஏ3,டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை.

| நிரல் I<br>பதிவு புத்தகங்களில் சிதைவடைந்த இருமடித்தாள்கள் பற்றிய விபரம் | நிரல் II<br>காணி பற்றிய விபரம் | நிரல் III<br>பதிவு செய்யப்பட்ட காணி உறுதி பற்றிய விபரம் |
|---|---|---|
| கொழும்பு மாவட்ட தெல்கந்த காணிப்பதிவக எம் பிரிவின் 1371 காணிப்பதிவுப்புத்தகத்தின் 140 ஆம் இருமடித்தாள் | மேல் மாகாண, கொழும்பு மாவட்ட கொழும்பு பல்லேபத்து - சல்பிட்டி கோரளை சுதர்சன வீதி, மல்வத்த இல் அமைந்துள்ள ம. இ. 12/7 "பிம்கட்டிய" என்ற பெயருடைய காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஆர். என். த சில்வா அவர்களின் 1975.12.31 ஆந் திகதிய 1641 (சிஎச்/ஒ/1/1095/979) இலக்க வரைபடத்தின் படி பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 03 என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதியின் எல்லைகள்,<br><br>வடக்கு : லொட் 02,<br>கிழக்கு : லொட் 08,<br>தெற்கு : லொட் 04,<br>மேற்கு : லொட் 07.<br><br>நிலப்பரப்பு : 00ஏ. 00றூ. 08பே | 1. தேசிய வீடமைப்பு ஆணையாளரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1983.03.02 ஆந் திகதிய 8354 ஆம் இலக்க அறுதி உறுதி.<br><br>2. பிரசித்த நொத்தாரிசு டி. பி. ஜயரத்ன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1985.07.02 ஆந் திகதிய 4268 ஆம் இலக்க நன்கொடை உறுதி. |

08-43

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல் (அத்தியாயம் 120)

கீழ்க் குறிப்பிட்ட பட்டோலையில் காணப்படும் II ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் I ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமாக III ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.

2. 2026.08.07 தொடக்கம் 2026.08.21 ஆந் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு ஹோமாகம காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமாக எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்து மூலம் 2026.08.28 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

எஸ். ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

எமது இல. : ஆர்ஜீ/ என்பீ/11/2/65/2026/ ஏடு. தயா,
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ ஏ3,டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை.

| நிரல் I<br>பதிவு புத்தகங்களில் சிதைவடைந்த இருமடித்தாள்கள் பற்றிய விபரம் | நிரல் II<br>காணி பற்றிய விபரம் | நிரல் III<br>பதிவு செய்யப்பட்ட காணி உறுதி பற்றிய விபரம் |
|---|---|---|
| கொழும்பு மாவட்ட ஹோமாகம காணிப்பதிவக ஜீ பிரிவின் 1567 காணிப்பதிவுப்புத்தகத்தின் 250 ஆம் இருமடித்தாள் | மேல் மாகாண, கொழும்பு மாவட்ட பல்லேபத்து - ஹேவாகம் கோரளை கொரதொட்ட இல் அமைந்துள்ள "கோன்கஹவத்த" என்ற பெயருடைய காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஆர். குணசேகர அவர்களின் 2006.07.23 ஆந் திகதிய 5186 ஆம் இலக்க வரைபடத்தின் படி பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 2 என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதியின் எல்லைகள்,<br><br>வ.கி : லொட் 01 மற்றும் 03,<br>தெ.கி : லொட் 03 மற்றும் 5177 வரைபடத்தின் லொட் 04,<br>தெ.மே: நீர்த்தேக்கம் மற்றும் வயல்,<br>வ.மேற்கு : 5177 வரைபடத்தின் லொட் 01.<br><br>நிலப்பரப்பு : 00ஏ. 01றூ. 20பே | 1. பிரசித்த நொத்தாரிசு எல். சி. சூரி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006.11.12 ஆந் திகதிய 5654 ஆம் இலக்க அறுதி உறுதி. |

08-44

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டு 01 மற்றும் இல, 19 இனால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

எச் எம் டப்ளியூ ஜீ எஸ் ஜயதிஸ்ஸ
கணக்கு இல. 0051 5000 8664

2026.04.29ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும், ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு 02, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக கண்டி பிரசித்த நொத்தாரிசுவான ஏ டப்ளியூ எஸ் கல்ஹாரி என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019 மார்ச் 11ஆந் திகதியிடப்பட்ட 4162 மற்றும் 2023 ஜூலை 19ஆந் திகதியிடப்பட்ட இல. 6086 எனும் ஈட்டு முறிகளின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் கடமைப்பட்டுள்ளார் எனும் வகையில் கடன்பட்ட ஹேரத் முதியன்சேலாகே வேவெல்மட கெதர சுனில் ஜயதிஸ்ஸ என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இலக்கங்கள். 4162 மற்றும் 6086 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாயில் ஒரு கோடியே எண்பத்தி எட்டு இலட்சத்து எழுபத்தி ஐந்தாயிரத்து நானூற்றி இருபத்தி ஏழு ரூபா அறுபது சதம் (ரூபா 18,875,427/60) 2026 பெப்ரவரி 25ஆந் திகதி முதல் இலக்கங்கள், 4162 மற்றும் 6086 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட ஒரு கோடியே எண்பத்தி எட்டு இலட்சத்து எழுபத்தி ஐந்தாயிரத்து நானூற்றி இருபத்தி ஏழு ரூபா அறுபது சதம் (ரூபா 18,875,427/60) 2026 பெப்ரவரி 26ஆந் திகதி முதல் இலக்கங்கள், 4162 மற்றும் 6086 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே எண்பது இலட்சத்து அறுபத்தி ஏழாயிரத்து இருநூற்று பன்னிரெண்டு ரூபா அறுபத்தி ஏழு சதம் (ரூபா 18,067,212.67) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் மூன்று தசம் ஐந்து வீதம் (13.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள். 4162 மற்றும் 6086 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள கூறப்பட்ட சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு மெசஸ் ரீ அன்ட் எச் ஒக்ஷன்ஸ் இன் உத்தரவுபெற்ற ஏலதாரரான திரு. எம் எச் ரீ கருணாரத்ன என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்)

சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.

### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

மத்திய மாகாணம் கண்டி மாவட்டம், மெதசிய பத்து கோரளே மற்றும் மெத தும்பர பிரதேச செயலாளர் பிரிவில் மெத தும்பர பிரதேச சபை எல்லைகளுக்குள் நமெதகல ரம்பபொத்த கிராம சேவகர் பிரிவின் நமெதகல ரபுக்பொத்த இல் அமைந்த "கலேகெலே எஸ்ட்டேட்" காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் PRWMKUK வீரகொட்டுவ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2018 மே 06ஆந் திகதியிடப்பட்ட இல. 523 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 01 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கிற்கு பாதை மற்றும் கலேகெலே எஸ்டேட், கிழக்கிற்கு கல்லொய, தெற்கிற்கு கண்டி முதல் மஹியங்கனை வரையான வீதி மற்றும் மேற்கிற்கு பாதை, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பத்தி இரண்டு தசம் ஒன்பது சைபர் பேர்ச் (AO-RO-P32.90) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட வரைப்படத்திற்கு அமைவாக குண்டசாலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் S 229/52 (கருத்துக்கள் பந்தி) இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற் கூறப்பட்ட இல, 523 எனும் வரைப்படத்தில் காட்டப்பட்ட லொட் 01 கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

மத்திய மாகாணம் கண்டி மாவட்டம், மெதசிய பத்து கோரளே மற்றும் மெத தும்பர பிரதேச செயலாளர் பிரிவின் மெத தும்பர பிரதேச சபை எல்லைகளுக்குள் நமெதகல ரபுக்பொத்த கிராம சேவகர் பிரிவின் நமெதகல - ரபுக்பொத்த இல் அமைந்த "கலேகெலே எஸ்ட்டேட்" காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் G S P லேனகல என்பவரால் தயாரிக்கப்பட்ட 1992 மார்ச் 31ஆந் திகதியிடப்பட்ட இல. 333 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் இலக்கங்கள் 01 மற்றும் 02 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன; வடக்கிற்கு மற்றும் மேற்கிற்கு வீதி, வட கிழக்கிற்கு காணிகள் சீர்திருந்த ஆணையத்திற்கு சொந்தமான கலேகெலே எஸ்ட்டேட் என்றழைக்கப்படும் காணி, கிழக்கிற்கு கல்லொய மற்றும் தெற்கிற்கு கரலியத்த முதல் ஹுன்னஸ்கிரிய வரையான பிரதான வீதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பத்தி இரண்டு தசம் ஒன்பது சைபர் பேர்ச் (A0-R0-P32.90) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட வரைப்படத்திற்கு அமைவாக குண்டசாலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் S 229/52 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்

08-78

---

### பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கியின் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

வாடிக்கையாளரின் பெயர் : நளின் புத்திக்க நவரத்ன ("நியூ சிங்கித்தி டயர் ஹவுஸ்" எனும் பெயர் மகுடத்தின் கீழ் வியாபாரத்தை நடாத்திச் செல்லும் ஏகபோக உரிமையாளர்)

கிளை : குண்டசாலை

1990ம் ஆண்டின் 4ம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8ம் பிரிவின் கீழ் பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ இன் பணிப்பாளர் சபையினால் 2026 ஜூன் 25 அன்று நடைபெற்ற கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமானதாக நிறைவேற்றப்பட்டது.

அதன்படி, "கடப்பாடுடையவரான/ஈடுவைத்தவரான" நளின் புத்திக்க நவரத்ன

("நியூ சிங்கித்தி டயர் ஹவுஸ்" எனும் பெயர் மகுடத்தின் கீழ் வியாபாரத்தை நடாத்திச் செல்லும் ஏகபோக உரிமையாளர்) என்பவர் பதிவு இல, பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ இன் சார்பில் கண்டியை சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு நில்னி சமிந்த வேகொடபொல அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 02.02.2024ம் திகதியிடப்பட்ட இல. 3135 எனும் முதன்மை ஈட்டுமுறி மீது வரவேண்டிய கொடுப்பனவுகளில் தவணை தவறியுள்ளார். ஆதலால்,

மேற்குறிப்பிடப்பட்ட பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ (இதனகத்துப் பின்னர் சிலவேளைகளில் வங்கி" என அடையாளம் காணப்படும்) இற்கு ஈடுவைக்கப்பட்ட 3135ம் இலக்க ஈட்டுமுறியினால், 25.05.2026 ம் திகதி வரையான முதன்மை பணத்தொகை மற்றும் வட்டியுடன் பெறவேண்டிய ரூபாய் பத்தொன்பது மில்லியன் ஆறு இலட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து அறுநூற்று முப்பத்தெட்டு (ரூபா 19,654,638.00) பணத்தொகையும் மற்றும் 26.05.2026ம் திகதியிலிருந்து ரூபா பதினெட்டு மில்லியன் எட்டு இலட்சத்து மூவாயிரத்து அறுநூற்று ஒன்று சதம் ஐம்பத்தொன்பது (ரூபா 18,803,601/59) வரையான பணத்தொகைக்கு 16% வருடாந்த வட்டியுடனான முழுப்பணத்தொகை வரவேண்டியும், சேரவேண்டியும் உள்ளது.

**இதன் மூலம் தீர்மானிக்கப்படுவதாவது:-**

மேற்சொல்லப்பட்ட ஈடுவைத்தவரிடமிருந்து பெறவேண்டிய ரூபாய் பத்தொன்பது மில்லியன் ஆறு இலட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து அறுநூற்று முப்பத்தெட்டு (ரூபா 19,654,638/-) எனும் முழுப்பணத்தொகை மற்றும் மேற்சொல்லப்பட்ட திகதியிலிருந்து ஏலவிற்பனை திகதி வரை மேற்குறிப்பிடப்பட்டுள்ளபடி வட்டியும், 1990 ஆம் ஆண்டின் 4ம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட

கடன்கள் அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் (செலுத்தப்பட்ட தொகையை கழித்ததன் பின்னர்) அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் வங்கியில் ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய 1990ஆம் ஆண்டின் 4ம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின் பிரகாரம் கண்டி, மாவில்மட துடுகெமுனு மாவத்தை, இல. 369/1 ஐச் சேர்ந்த உரிமம் பெற்ற ஏலதாரர் N. U. ஜயசூரிய என்பவருக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கின்றதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

### மேற்கூறப்பட்ட முதலாம் அட்டவணை

மத்திய மாகாணம் கண்டி மாவட்டம், கங்கவட்ட கோரளை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கங்கவட்ட கோரளை பிரதேச செயலகப் பிரிவில், குருதெனிய (கிழக்கு) கிராம உத்தியோகத்தர் பிரிவு, குருதெனியவில் அமைந்துள்ள "ஜம்புகஹயட்ட கும்புர தற்போது தோட்டம் மற்றும் தெடிகம கெதர வத்த எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் S. A. ஹேரத் அவர்களினால் தயாரிக்கப்பட்ட 16 பெப்புருவரி 2012 ஆந் திகதிய வரைபட இல. 860 காணித்துண்டு 1 என விபரிக்கப்பட்டு, பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அருன குருகே,
முகாமையாளர் கடன் அறவீடுகள்.

08-42

---

## செலான் வங்கி பீஎல்சீ

(2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு அமைய 9 என்ற இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் செலான் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

இத்தால் அறிவிக்கப்படுவது என்னவென்றால், வங்கிகளினால் கடன்களை மீள அறவிடுவதற்கான (விசேட ஏற்பாடுகள்) திருத்தப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் பிரிவு 8 இன் கீழ் செலான் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால், 2026.07.30 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

கிளை: பதுளை
கணக்கு இலக்கம்: 0260-13647182-001

ஆகையால், யாப்பா முதியன்சேலாகே மலக்க பிரியந்த யாப்பா என்பவர், கோட்டையில் அதன் பதிவுச் சான்றிதழ் இல. டப்ளியூ 76268 இன் கீழ், "நிம்ரோ இன்டர்நேஷனல் (ஹவுஸ் ஒப் லைட்டிங்ஸ்)" என்ற பெயர், பாணி மற்றும் நிறுவனத்தின் கீழ் ஒரு தனியுரிமை வணிகத்தை நடத்தி வருபவர் "கடப்பாட்டாளர்/ ஈடுவைத்தவர்" என்ற வகையில் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகள் செலுத்தத் தவறியதால், செலான் வங்கி பீஎல்சீ (2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு அமைய PQ 09 என்ற இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது) சார்பில், பிரசித்த நொத்தாரிசு ரேணுகா உடுவன, என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட அனைத்துமான 2025 ஒக்டோபர் மாதம் 02 ஆம் திகதி இடப்பட்ட இரண்டுமான 94 மற்றும் 2022 மார்ச் மாதம் 02 ஆம் திகதி இடப்பட்ட இரண்டுமான 1041 மற்றும் 1042 மற்றும் 2025 ஜூன் மாதம் 25 ஆம் திகதி இடப்பட்ட அனைத்துமான 1019, 1020 மற்றும் 1021, 2024 நவம்பர் மாதம் 08 ஆம் திகதி இடப்பட்ட 975, 2024 செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி இடப்பட்ட அனைத்துமான 956, 957, 958, 959 ஆம் இலக்க ஈட்டு முறிகள் மீதான வருமதியாக, செலான் வங்கி பீஎல்சீ கணக்கில் நிலுவையாக உள்ள முதல், வட்டி என்பன உள்ளடங்கலாக 2026 பெப்ரவரி மாதம் 09 ஆம் திகதி அன்று வரையிலான மொத்தத் தொகையாக, தொண்ணூற்றேழு மில்லியன் ஐந்நூற்று இருபதாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்றேழு ரூபாய் மற்றும் நாற்பத்தைந்து சதம் (ரூபா 97,520,897,45) கொண்ட பணத்தொகை அத்துடன், சொல்லப்பட்ட எல்லாம் வட்டி உள்ளடங்கலாக கடன் வசதி வாய்ப்புகள் மீதும் அத்துடன் மேற் குறிப்பிடப்பட்ட முறியில் சொல்லப்பட்டவைகளும் செலான் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) திருத்தப்பட்ட சட்டத்தால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 956, 957, 958, 959, 975, 1019, 1020, 1021, 1041 மற்றும் 1042 ஆம் இலக்கம் கொண்ட ஈட்டு முறிகளின் மூலம், செலான் வங்கி பீஎல்சீ நிறுவனத்துக்கு ஈடு வைக்கப்பட்டதுமான ஆதனங்கள் மற்றும் வளவுகள் மதிப்பிடப்பட்ட தொண்ணூற்றேழு மில்லியன் ஐந்நூற்று இருபதாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்றேழு ரூபாய் மற்றும் நாற்பத்தைந்து சதம் (ரூபா 97,520,897,45) கொண்ட பணத்தொகையுடன் 2026 பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதியில் இருந்து விற்பனையில் முழுத்தொகையையும் பெற்றுக்கொள்ளும் நாள் வரை, அதன் மீதான வட்டியுடன் விளம்பரச் செலவுகள் மற்றும் இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து இச் சட்டத்தின் பிரிவு 13 இன் படி (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) முழுத் தொகையையும் அறவிடுவதற்காக, உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் திருமதி. சந்திமா கமகே, பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அ) சொல்லப்பட்ட நிரந்தர மேலதிகப்பற்று வசதி வாய்ப்பினூடாக ரூபா 25,000,000.00 கொண்ட தொகைக்கு அறுபத்தொரு மில்லியன் எழுநூற்று எண்பதாயிரத்து இருநூற்று ஐம்பத்தொன்பது ரூபாய் மற்றும் அறுபத்தி நான்கு சதம் (ரூபா 61,780,259.64) கொண்ட தொகைக்கான அத்துடன் 2026 பெப்ரவரி மாதம் 09 ஆம் திகதி அன்று வரை வட்டியுடன் சேர்த்து இருபத்தெட்டு சதவீதம் (28%) ஆண்டுக்கு 2026 பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி முதல் முழு கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படும் வரை.

(ஆ) சொல்லப்பட்ட தவணைக் கடன் வசதி வாய்ப்பினூடாக ரூபா 20,000,000.00 கொண்ட தொகைக்கு பதினேழு மில்லியன் நானூற்றுப் பதினைந்தாயிரத்து எழுநூற்று நாற்பத்தேழு ரூபாய் மற்றும் நாற்பத்தேழு சதம்

(ரூபா 17,415,747.47) கொண்ட தொகைக்கான அத்துடன் 2026 பெப்ரவரி மாதம் 09 ஆம் திகதி அன்று வரை பதினாறு மில்லியன் ஒன்பது நூற்று நான்காயிரத்து எழுநூற்று ஐம்பத்திரெண்டு ரூபாய் (ரூபா 16,904,752.00) கொண்ட தொகைக்கு வட்டியுடன் சேர்த்து பன்னிரெண்டு தசம் எட்டு ஏழு சதவீதம் (12.87%) ஆண்டுக்கு 2026 பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி முதல் முழு கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படும் வரை.

(இ) சொல்லப்பட்ட குறுகிய கால சுழற்சி தவணைக் கடன் வசதி வாய்ப்பினூடாக ரூபா 10,000,000.00 பெறுமதியான தொகை குறுகிய கால தவணைக் கடன் ஐ வசதியின் கீழ் பெறப்பட்ட ரூபா 2,500,000.00 கொண்ட தொகைக்கு இரண்டு மில்லியன் ஐந்நூற்று இருபத்திரெண்டாயிரத்து நூற்று தொண்ணூற்று எட்டு ரூபாய் மற்றும் எண்பத்தேழு சதங்கள் (ரூபா 2,522,198.87) கொண்ட தொகைக்கான அத்துடன் 2026 பெப்ரவரி மாதம் 09 ஆம் திகதி அன்று வரை இரண்டு மில்லியன் நானூற்று முப்பத்தெட்டாயிரத்து ஐந்நூற்று இருபத்தேழு ரூபாய் மற்றும் முப்பத்திரெண்டு சதங்கள் (ரூபா 2,438,527,32) கொண்ட தொகைக்கு வட்டியுடன் சேர்த்து பன்னிரெண்டு தசம் ஒரு சதவீதம் (12.1%) ஆண்டுக்கு 2026 பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி முதல் முழு கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படும் வரை.

(ஈ) சொல்லப்பட்ட குறுகிய கால சுழற்சி தவணைக் கடன் வசதி வாய்ப்பினூடாக ரூபா 10,000,000.00 பெறுமதியான தொகை குறுகிய கால தவணைக் கடன் II வசதியின் கீழ் பெறப்பட்ட ரூபா 1,500,000,00 கொண்ட தொகைக்கு ஒரு மில்லியன் ஐந்நூற்று ஐம்பத்தெட்டாயிரத்து ஐந்நூற்று பதினெட்டு ரூபாய் மற்றும் எட்டு சதங்கள் (ரூபா 1,558,518,08) கொண்ட தொகைக்கான அத்துடன் 2026 பெப்ரவரி மாதம் 09 ஆம் திகதி அன்று வரை ஒரு மில்லியன் ஐந்நூறாயிரம் ரூபாய் (ரூபா 1,500,000.00) கொண்ட தொகைக்கு வட்டியுடன் சேர்த்து பன்னிரெண்டு தசம் ஒரு சதவீதம் (12.1%) ஆண்டுக்கு 2026 பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி முதல் முழு கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படும் வரை.

(உ) சொல்லப்பட்ட குறுகிய கால சுழற்சி தவணைக் கடன் வசதி வாய்ப்பினூடாக ரூபா 10,000,000.00 பெறுமதியான தொகை குறுகிய கால தவணைக் கடன் III வசதியின் கீழ் பெறப்பட்ட ரூபா 6,000,000.00 கொண்ட தொகைக்கு ஆறு மில்லியன் இருநூற்றுப் பத்தொன்பதாயிரத்து நூற்று ஐம்பத்தாறு ரூபாய் மற்றும் பதினாறு சதங்கள் (ரூபா 6,219,156.16) கொண்ட தொகைக்கான அத்துடன் 2026 பெப்ரவரி மாதம் 09 ஆம் திகதி அன்று வரை ஆறு மில்லியன் ரூபாய் (ரூபா 6,000,000.00) கொண்ட தொகைக்கு வட்டியுடன் சேர்த்து பன்னிரெண்டு தசம் ஒரு சதவீதம் (12.1%) ஆண்டுக்கு 2026 பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி முதல் முழு கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படும் வரை.

(ஊ) சொல்லப்பட்ட காசோலை தள்ளுபடி காரணிப்படுத்தல் வசதி வாய்ப்பினூடாக ரூபா 10,000,000.00 கொண்ட தொகைக்கு எட்டு மில்லியன் இருபத்தைந்தாயிரத்து பதினேழு ரூபாய் மற்றும் இருபத்திமூன்று சதங்கள் (ரூபா 8,025,017.23) கொண்ட தொகைக்கான அத்துடன் 2026 பெப்ரவரி மாதம் 09 ஆம் திகதி அன்று வரை ஏழு மில்லியன் தொள்ளாயிரத்து எழுபத்தாறாயிரத்து நூற்று அறுபத்தைந்து ரூபாய் மற்றும் பதினொரு சதங்கள் (ரூபா 7,976,165.11) கொண்ட தொகைக்கு வட்டியுடன் சேர்த்து இருபத்தெட்டு சதவீதம் (28%) ஆண்டுக்கு 2026 பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி முதல் முழு கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படும் வரை.

### மேலே குறிப்பிடப்பட்ட முதலாவது அட்டவணை

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், பதுளை மாநகர சபை எல்லைகள் மற்றும் பதுளை பிரதேச செயலாளர் பிரிவுக்குள். பதுளை நகரத்திலும் அதனுடன் இணைந்த கல்லறை பகுதிகளிலும் இலக்கம் 78பீ பதுளை மத்திய கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட மஹாவெலகம கிராமத்தில் அமைந்துள்ள "கல்பொத்தே கும்புற" என அழைக்கப்படும் காணியின் (உரிமம் பெற்ற நில அளவையாளர் எம். பைஸி ஃபுவாத் இஸ்மாயில் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2007.02.18 ஆம் திகதி இடப்பட்ட 1433 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 1 என அடையாளம் இடப்பட்ட காணித் துண்டின் மீள் அளவீடாகும்) உரிமம் பெற்ற நில அளவையாளர் எம். பைஸி ஃபுவாத் இஸ்மாயில் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2022.03.04 ஆம் திகதி இடப்பட்ட 2826 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 1 என அடையாளம் இடப்பட்ட காணித்துண்டு பிரிக்கப்பட்டும் மற்றும் வரையறுக்கப்பட்டும் மேற் கூறப்பட்ட லொட் 1 என்ற காணியின் எல்லைகள் வடக்கு: உரிமம் பெற்ற நில அளவையாளர் கே. என். வி. செயோன், என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1971.07.20 ஆம் திகதி இடப்பட்ட 810$^{A}$ ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 03 காணித் துண்டின்படி. சுதர்ஷன் பெரேராவின் தோட்டத்தின் மூலம் கிழக்கு: ரத்வத்த மாவத்தையால் இன் மூலம் தெற்கு: பண்டாரநாயக்க மாவத்தை மற்றும் துன்ஹிந்த நீர்வீழ்ச்சி மற்றும் அல்விஸின் வளாகத்தின் மூலம் மேற்கு:உரிமம் பெற்ற நில அளவையாளர் கே. என். வி. செயோன், என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1971.07.20 ஆம் திகதி இடப்பட்ட 810$^{A}$ ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 2$^{A}$ காணித் துண்டின்படி, டீ. ஜி. அபேய்குணவர்தனவின் தோட்டத்தின் மூலம் மற்றும் தற்போது அங்கு வைக்கப்பட்டுள்ள மற்றும் இனிமேல் வைக்கப்படவுள்ள அனைத்து அசையும் மற்றும் அசையா இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், தோட்டங்கள், கட்டிடங்கள், நிரந்தரப் பொருத்துதல்கள் அல்லது நிர்மாணிப்புகள் மற்றும் அங்கு தற்போது அமைந்துள்ள அல்லது இனிமேல் அமைக்கப்படவுள்ள அனைத்து கட்டமைப்புகளுடன் சேர்த்து, ஒரு அடுக்குமாடி குடியிருப்பு திட்டம் மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு பிரகடனத்தின் கீழ் உள்ள எந்தவொரு மற்றும் அனைத்து அடுக்குமாடி குடியிருப்புத் துண்டுகள் / அலகுகள் உட்பட ஆனால் அவற்றிற்கு மட்டும் வரையறுக்கப்படாமல் மற்றும் இவை அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளன மற்றும் காணியின் அளவானது இருபது தசம் நான்கு ஐந்து பேர்ச்சஸ் (ஏ:0 ரூபா 0 பே:20.45) அல்லது 0.0517 ஹெக்டேயர் மற்றும் அதில் நிற்கும் மற்ற அனைத்தும் அடங்களான காணி.

பிரசித்த நொத்தாரிசு ரேணுகா உடுவன, என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட அனைத்துமான 2024 நவெம்பர் மாதம்

08 ஆம் திகதி இடப்பட்ட 975 மற்றும் 2024 செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி இடப்பட்ட அனைத்துமான 956, 957, 958 மற்றும் 959 ஆம் இலக்கத்தைக் கொண்ட ஈட்டு முறிகளின் மூலம் அடமானம் வைக்கப்பட்டுள்ளது.

### மேலே குறிப்பிடப்பட்ட இரண்டாவது அட்டவணை

மேல் மாகாணத்தின், கொழும்பு மாவட்டத்தில், பல்லே பத்து ஹேவாகம் கோரளையில், கடுவெல பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கடுவெல மாநகர சபை எல்லைக்குள், இலக்கம் 475 வெலிவிட்ட கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட, வெலிவிட்டவில் அமைந்துள்ள, (உரிமம் பெற்ற நில அளவையாளர் அனில் நவகமுவ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2009.01.24 ஆம் திகதி இடப்பட்ட 3715 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் ஏ2 காணித் துண்டின் தற்போதுள்ள எல்லைகளின் மீள் அளவீடாகும்) உரிமம் பெற்ற நில அளவையாளர் அனில் நவகமுவ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2025.02.16 ஆம் திகதி இடப்பட்ட 7324 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 01 எனக் குறிக்கப்பட்டுள்ளது கெட்டகெலகஹாவத்த" என்ற பெயரிலும், "தொடங்கஹாவத்த" என்ற மாற்றுப் பெயரிலும் அழைக்கப்பட்டு அறியப்படும், பிரிக்கப்பட்டு எல்லைகள் வரையறுக்கப்பட்ட முழுமையான காணித் துண்டு மற்றும் மேற் கூறப்பட்ட லொட் 1 என்ற காணியின் எல்லைகள் வடக்கு வடிகால் மூலம் கிழக்கு உரிமம் பெற்ற நில அளவையாளர் அனில் நவகமுவ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1292 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் ஏ5 மற்றும் 3715 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் ஏ$^{2பி}$ காணித் துண்டு மற்றும் காணித் துண்டின் மூலம் தெற்கு: உரிமம் பெற்ற நில அளவையாளர் அனில் நவகமுவ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1292 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் ஏ$^4$ காணித் துண்டின் மூலம் மேற்கு: டபிள்யூ, எம். எம். சி. பெரேராவின் வாரிசுகளுக்குச் சொந்தமான காணி இன் மூலம் மற்றும் தற்போது அங்கு வைக்கப்பட்டுள்ள மற்றும் இனிமேல் வைக்கப்படவுள்ள அனைத்து அசையும் மற்றும் அசையா இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், தோட்டங்கள், கட்டிடங்கள், நிரந்தரப் பொருத்துதல்கள் அல்லது நிர்மாணிப்புகள் மற்றும் அங்கு தற்போது அமைந்துள்ள அல்லது இனிமேல் அமைக்கப்படவுள்ள அனைத்து கட்டமைப்புகளுடன் சேர்த்து, ஒரு அடுக்குமாடி குடியிருப்பு திட்டம் மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு பிரகடனத்தின்கீழ் உள்ள எந்தவொரு மற்றும் அனைத்து அடுக்குமாடி குடியிருப்புத் துண்டுகள் அலகுகள் உட்பட ஆனால் அவற்றிற்கு மட்டும் வரையறுக்கப்படாமல் மற்றும் இவை அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளன மற்றும் காணியின் அளவானது இருபத்து நான்கு தசம் எட்டு புஜ்ஜியம் பேர்ச்சஸ் (00ஏ. 00றூ 24.80பே)அல்லது 0.0627 ஹெக்டேயர் மற்றும் அதில் நிற்கும் மற்ற அனைத்தும் அடங்களான காணி மற்றும் உரிமம் பெற்ற நில அளவையாளர் அனில் நவகமுவ, என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1292 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் ஏ$^5$ காணித் துண்டின் மீது மற்றும் அதனூடாக செல்லும் பொதுவான பாதை உரிமையுடன் சேர்த்து,

பிரசித்த நொத்தாரிசு ரேணுகா உடுவன, என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட அனைத்துமான 2025 ஜுன் மாதம் 25 ஆம் திகதி இடப்பட்ட அனைத்துமான 1019, 1020 மற்றும் 1021 ஆம் இலக்கத்தைக் கொண்ட ஈட்டு முறிகளின் மூலம் அடமானம் வைக்கப்பட்டுள்ளது.

### மேலே குறிப்பிடப்பட்ட மூன்றாவது அட்டவணை

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், பியகம பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சியனே கோரளையில் அதிகாரி பத்துவில், பியகம பிரதேச சபை எல்லைக்குட்பட்ட, இல. 276 மாபிம கிராம சேவையாளர் பிரிவுக்குள், மாபிம கிராமத்தில் அமைந்துள்ள, உரிமம் பெற்ற நில அளவையாளர் லெஸ்லி என் பெர்னாண்டோ என்பவரினால் தயாரிக்கப்பட்ட இரண்டுமான 2020.10.04 ஆம் திகதி இடப்பட்ட 10232ஏ ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் எக்ஸ் 1 மற்றும் 2020.10.03 ஆம் திகதி இடப்பட்ட 10232 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் வை 1 இது காணித் துண்டின் மீள் அளவீடு மற்றும் ஒன்றிணைப்பாகும்) உரிமம் பெற்ற நில அளவையாளர் லெஸ்லி என் பெர்னாண்டோ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2020.10.05 ஆம் திகதி இடப்பட்ட 10232 பி ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் எக்ஸ்1 /வை 1 "மில்லகஹவத்த" என அழைக்கப்படும் மற்றும் அறியப்படும், பிரிக்கப்பட்டு எல்லைகள் வரையறுக்கப்பட்ட காணி துண்டாகக் காட்டப்பட்டுள்ள முழுமையான காணித் துண்டு மற்றும் மேற் கூறப்பட்ட எக்ஸ்1/வை1 என்ற காணியின் எல்லைகள் வடக்கு: உரிமம் பெற்ற நில அளவையாளர் லெஸ்லி என் பெர்னாண்டோ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 6919 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் எக்ஸ் இன் மீதமுள்ள பகுதியின் வழியாக கிழக்கு சாந்த ஸ்ரீ மல்லிகாரச்சி அவர்களுக்குச் சொந்தமான நிலத்தின் வழியாக தெற்கு உரிமம் பெற்ற நில அளவையாளர் லெஸ்லி என். பெர்னாண்டோ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 10232 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் வை 3 மற்றும் வை 2 இன் வழியாக மேற்கு பிரதேச சபைக்குச் சொந்தமான வீதியின் வழியாக மற்றும் தற்போது அங்கு வைக்கப்பட்டுள்ள மற்றும் இனிமேல் வைக்கப்படவுள்ள அனைத்து அசையும் மற்றும் அசையா இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், தோட்டங்கள், கட்டிடங்கள், நிரந்தரப் பொருத்துதல்கள் அல்லது நிர்மாணிப்புகள் மற்றும் அங்கு தற்போது அமைந்துள்ள அல்லது இனிமேல் அமைக்கப்படவுள்ள அனைத்து கட்டமைப்புகளுடன் சேர்த்து, ஒரு அடுக்குமாடி குடியிருப்பு திட்டம் மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு பிரகடனத்தின் கீழ் உள்ள எந்தவொரு மற்றும் அனைத்து அடுக்குமாடி குடியிருப்புத் துண்டுகள் அலகுகள் உட்பட ஆனால் அவற்றிற்கு மட்டும் வரையறுக்கப்படாமல் மற்றும் இவை அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளன மற்றும் காணியின் அளவானது இருபத்திரெண்டு தசம் எட்டு ஐந்து பேர்ச்சஸ் (00ஏ. 00றூ. 22.85பே) அல்லது 0.05778 ஹெக்டேயர் மற்றும் அதில் நிற்கும் மற்ற அனைத்தும் அடங்களான காணி மேலும், உரிமம் பெற்ற நில அளவையாளர் எல். என் பெர்னாண்டோ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 28.03.2015 ஆம் திகதி இடப்பட்ட 6916 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வீதி ஒதுக்கிட்டு பகுதிகளின் மீது மற்றும் அவற்றின் வழியாகச்

செல்லும் வழிச்செலுத்தல் உரிமைகள், அவற்றைப் பயன்படுத்தும் மற்றும் பராமரிக்கும் உரிமைகள், அத்துடன் அதில் சித்தரிக்கப்பட்டுள்ள பொதுவான சேவையுரிமைகள் அனைத்தும் சேர்த்து வழங்கப்படுகின்றன.

பிரசித்த நொத்தாரிசு ரேணுகா உடுவன, என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட இரண்டுமான 2025 ஒக்டோபர் மாதம் 02 ஆம் திகதி இடப்பட்ட இரண்டுமான 1041 மற்றும் 1042 ஆம் இலக்கத்தைக் கொண்ட ஈட்டு முறிகளின் மூலம் அடமானம் வைக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைக்கு அமைய,
(திருமதி) வி. ஏ. பரணகம,
சட்டத்தரணி,
உதவி பொது முகாமையாளர் - சட்டத்துறை.

08-47

---

## கொமர்ஷல் பேங்க் ஓஃப் சிலோன் பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீளப் பெற்றுக்கொள்வதற்கான (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கொமர்ஷல் பேங்க் ஓஃப் சிலோன் பீஎல்சீ இன் (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

வங்கி கிளை: பெல்மடுல்ல கிளை
கடன்கணக்கு இலக்கம்: 2364092

**ஐயசேகர ஆரச்சிலாகே சூலனி அமரசேன**

2023 ஒக்டோபர் 25 ஆம் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தில் கொமர்ஷல் பேங்க் ஓஃப் சிலோன் பீஎல்சீ இன் பணிப்பாளர் சபை ஏகமனதாக பின்வருமாறு தீர்மானித்தது;

கொமர்ஷல் பேங்க் ஓஃப் சிலோன் பீஎல்சீ இன் பெயருக்கு எழுதப்பட்டதும், கீழே அட்டவணையில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளதுமான காணி மற்றும் வளாகத்தின் மீது இரத்தினபுரி பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ.கே.எல்.டபிள்யூ, அபேரத்ன அவர்களினால் 2019 பெப்ரவரி 08 ஆம் திகதி உறுதிசெய்யப்பட்ட 167 ஆம் இலக்க அடமானப் பிணையப் பத்திரத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளை இல 11/17, தர்மபால மாவத்தை, பெல்மடுல்ல எனும் முகவரியைச் சேர்ந்த ஜயசேகர ஆரச்சிலாகே சூலனி அமரசேன தவறவிட்டுள்ளமையினாலும்,

மேலும் ஏனைய விடயங்களுடன், மேற்படி அடமானப் பிணையப் பத்திரத்தின் கீழ் 2023 ஜூலை 07 ஆம் திகதி வரை பதினேழு மில்லியன் எட்டு இலட்சத்து பதின்மூன்றாயிரத்து எண்ணூற்று பதின்மூன்று ரூபாயும் சதம் ஒன்று (ரூபா 17,813,813.01) கொண்ட தொகையானது கொமர்ஷல் பேங்க் ஒஃப் சிலோன் பீஎல்சீ இப்போது செலுத்தப்பட வேண்டியதும் வரவுள்ளதுமாக இருக்கின்றமையினாலும், குறித்த பதினேழு மில்லியன் எட்டு இலட்சத்து பதின்மூன்றாயிரத்து எண்ணூற்று பதின்மூன்று ரூபாயும் சதம் ஒன்று (ரூபா 17,813,813,01) கொண்ட தொகையையும், 2023 ஜூலை 08 ஆம் திகதி முதல் விற்பனை செய்யப்படும் திகதி வரையிலான காலப்பகுதிக்கு ரூபா 14,950,000.00 கொண்ட தொகை மீதான ஆண்டிற்கு 11.50% வீதமான மேலதிக வருடாந்த வட்டியையும் அறவிட்டுக்கொள்வதற்காகவும், விளம்பரக் கட்டணங்கள் மற்றும் ஏனைய செலவினங்கள் சேர்க்கப்பட்டு, இதுவரையில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் தொகைகள் இருப்பின் அவசியமானவாறு கழிக்கப்பட்டும்;

குறித்த 167 ஆம் இலக்க அடமானப் பிணையப் பத்திரத்தின் மூலம் கொமர்ஷல் பேங்க் ஒஃப் சிலோன் பீஎல்சீ க்கு அடமானம் வைக்கப்பட்டுள்ளதும் கீழே அட்டவணையில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளதுமான காணி மற்றும் வளாகத்தை, இல. 30/83, கடுவாவல வீதி, மகரகம மற்றும் இல. 200, 2 ஆம் மாடி, அல்டோர்ஃப் வீதி, கொழும்பு 12 ஆகிய இடங்களில் "திரிவங்க என்ட் சேனாநாயக்க ஒக்ஷனியர்ஸ்" எனும் பெயர், பாணி மற்றும் அமைப்பின் கீழ் கூட்டாண்மை வியாபாரத்தை நடாத்தி வருகின்ற அங்கீகரிக்கப்பட்ட பகிரங்க ஏல விற்பனையாளர்களான லொகு பண்டா சேனாநாயக்க, மகுருதெனிய வலவ்வே திரிவங்க சரித் சேனாநாயக்க மற்றும் குருகே சுமனாவதி சேனாநாயக்க ஆகியோரைக் கொண்டு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படல் வேண்டுமென, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீளப் பெற்றுக்கொள்வதற்கான (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் கொமர்ஷல் பேங்க் ஒஃப் சிலோன் பீஎல்சீ இன் பணிப்பாளர் சபை தீர்மானிக்கின்றது.

**மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை**

**காணித் துண்டு 1**

சப்ரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், நவதுன் கோரளை, உடபத்துவ, பெல்மடுல்ல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட, பெல்மடுல்ல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள இல, 167B இஹல போபிட்டிய கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள இதி கெட்டிய கிராமத்தில் உள்ள "வெலிஹிந்தவத்த" (வெலிஹிந்த எஸ்டேட்) என அழைக்கப்படும் காணிக்கு, உரிமம்பெற்ற அளவையாளர் எம்.எஸ். தியகம என்பவரால் 2000.08.24 ஆம் திகதியன்று தயாரிக்கப்பட்ட 4479 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டாடப்பட்ட காணித் துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ள காணித் துண்டிற்கான எல்லைகளாவன:

வடக்கு: ஹொரகெட்டியே ஹேன, ஹீனடிலியத்த; கிழக்கு: ஓடை; தெற்கு: லொட் 4; மேற்கு: லொட் 3 (பாதை).

ஆகியவற்றால் சூழப்பட்டதும், மேற்படி 4479 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒரு ஏக்கர் இரண்டு ரூட் பத்து பேர்ச்சஸ் (ஏ:1-ரூ: 2 - பே: 10) விஸ்தீரணத்தைக் கொண்டதுமான காணியும், அதிலுள்ள கட்டிடங்கள், மரங்கள். பயிர்கள் மற்றும் அதில் அமைந்துள்ள அனைத்துக் கூறுகளும் அடங்கலாக.

**காணித் துண்டு 2**

சப்ரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், நவதுன் கோரளை, உட பத்துவ, பெல்மடுல்ல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட, பெல்மடுல்ல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள, இல. 167B கிராம அலுவலர் பிரிவிலுள்ள

போபிட்டியவில் அமைந்துள்ள "வெலிஹிந்தவத்த" என அழைக்கப்படும் காணிக்கு, உரிமம்பெற்ற அளவையாளர் எல்.கே.கே. ஆனந்ததிலக்க என்பவரால் 2019.11.08 ஆம் திகதியன்று தயாரிக்கப்பட்ட 1702 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள லொட் 1 எனக் குறிக்கப்பட்ட, கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜே.எம்.பி.எஸ். ஜயவீர அவர்களினால் 2021 ஜனவரி 26 ஆம் திகதியன்று விடுவிப்புச் செய்யப்பட்ட 4247 ஆம் இலக்க விடுவிப்பு உறுதிப்பத்திரத்தின் மூலம் விடுவிக்கப்பட்ட காணியின் பகுதி தவிர்ந்த காணித்துண்டிற்கான எல்லைகளாவன:

வடக்கு: 4479 ஆம் இலக்க வரைப்படத்திலுள்ள லொட் 1 இன் மீதிப் பகுதி; கிழக்கு: ஓடை; தெற்கு: 1701 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள லொட் 1; மேற்கு: எஸ்டேட் பாதை

ஆகியவற்றால் சூழப்பட்டதும், மேற்படி 1702 ஆம் இலக்க வரைபடத்தின்படி இருபத்தேழு புள்ளி இரண்டு ஐந்து பேர்ச்சஸ் (00ஏ. 00றூ. 27.25பே) விஸ்தீரணத்தைக் கொண்டதுமான காணியும், அதிலுள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் அதில் அமைந்துள்ள அனைத்துக் கூறுகளும் அடங்கலாக.

**காணித் துண்டு 3**

